# பகுப்பத உறுப்பிலக்கணம்

**பதம் (சொல்)**

| பகுபதம் | பகாப்பதம் |
|---|---|
| சொற்கள் பிரிக்கக் கூடிய வகையில் அமைந்திருந்தால் அது பகுபதம் எனப்படும்.<br>**எடுத்துக்காட்டு :**<br>• அறிஞன் - அரி + ஞ் + அன்<br>• படித்தான் - படி + த் + த் +ஆன் | பிரிக்க முடியாத பிரித்தால் பொருள் தராத சொல் பகாப்பதம் எனப்படும்.<br>**எடுத்துக்காட்டு :**<br>மண், விண், காற்று, நீர், நட, வா, உண் போன்றவை. |

**<u>பகுபத உறுப்புகள் :</u>**

**<u>பகுதி</u>**

- ஒரு சொல்லின் அடிச்சொல்லே பகுதியாகும், இதை **முதனிலை** என்று கூறுவர்.
- விகுதி பெறாத ஏவல் வினையாக வரும்.
- பகுதி, விகுதி என பிரிக்க இயலாததாக இருக்கும்.
- பாடினான் – பாடு + இன் + ஆன் பாடு பகுதியாகவும், விகுதி பெறாத ஏவல் வினையாகவும் வருகிறது.
- அறிஞர்– அரி + ஞ் + அர். அறி பகுதியாகவும், விகுதி பெறாத ஏவல் வினையாகவும் வருகிறது.
- பகுதி சில சொற்களில் ஒற்று இரட்டித்து காலம் காட்டும்.

**எடுத்துக்காட்டு**

ஊரன் – ஊர்; நடிகன்- நடி ; பார்த்தான்– பார் ; வரைந்தான்– வரை ;

மடித்தார் - மடி; மகிழ்ந்தான்– மகிழ்.

**விகுதி:**

ஒரு வினைமுற்றுச் சொல்லின் இறுதியில் நின்று திணை, பால், எண், இடம், ஆகியவற்றை வெளிப்படுத்தும் உறுப்பு விகுதி எனப்படும். இது இறுதிநிலை எனப்படுகிறது.

- கொடுத்தான் - கொடு+த்+த்+ ஆன்
- படித்தான் - படி+த்+த்+ஆன்
- நடந்தது - நட + த்(ந்) +த்+அ+து
- மேற்கண்டவற்றில் ஆன், ஆள், து என்பதை விகுதிகளாகும்.
- ஆன் – உயர்திணை, ஆண்பால், ஒருமை, படுக்கை, இடம், ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது.
- ஆள் - உயர்த்திணை, பெண்பால், ஒருமை, படுக்கை, இடம் ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது.
- வியங்கோள் வினைமுற்று, தொழிற்பெயர் பெயரெச்சம், வினையெச்சம் போன்ற பல்வேறு இலக்கண பொருண்மைகளை உணர்த்தவும் விகுதி பயன்படுகிறது.

www.tnpscgroup4.in



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

**எடுத்துக்காட்டு**

| | |
|---|---|
| அன், ஆன் | ஆண்பால் வினைமுற்று விகுதி |
| அள், ஆள் | பெண்பால் வினைமுற்று விகுதி |
| அர், ஆர், ப, மார், கள் | படர்க்கை பலர்பால் வினைமுற்று விகுதிகள் |
| து, று, டு | படர்க்கை ஒன்றன்பால் வினைமுற்று விகுதிகள் |
| அ, ஆ | படர்க்கை பலவின்பால் வினைமுற்று விகுதிகள் |
| என், ஏன், அல், அன், கு, டு, து, று | தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகள் |
| அம், ஆம், எம், ஏம், ஓம், கும், டும், தும், றும் | தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகள் |
| ஐ, ஆய், இ | முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகள் |
| இர், ஈர், மின் | முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகள் |
| அ, உம் | தெரிநிலை பெயரெச்ச விகுதிகள் |
| இ, உ | தெரிநிலை வினையெச்ச விகுதிகள் |
| க, இய, இயர் | வியங்கோள் வினைமுற்றுகள் |
| தல், அழ, ஐ, கை, சி, பு | தொழிற்பெயர் விகுதிகள் |

**இடைநிலை**

- பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் தோன்றும் உறுப்புக்கு இடைநிலை என்று பெயர்.
- வினைப் பதத்தில் வரும் இடைநிலை **கால இடைநிலை**, **எதிர்மறை இடைநிலை** என இரு வகைப்படும்.
- பெயர் பகுபதத்தில் வரும் இடைநிலை, **பெயர் இடைநிலை** எனப்படும்.

**எடுத்துக்காட்டு**

| | |
|---|---|
| த், ட், ற், இன் | இறந்த கால இடைநிலைகள் |
| கிறு, கின்று, ஆநின்று | நிகழ்கால இடைநிலைகள் |
| ப், வ், க் | எதிர்கால இடைநிலைகள் |
| அல், ஆ, இ | எதிர்மறை இடைநிலைகள் |
| ச், ஞ், த், ந், வ் | பெயர் இடைநிலைகள் |

**சந்தி**

சந்தி என்பதற்கு தமிழில் புணர்ச்சி என்று பெயர். பகுதி, விகுதி, இடைநிலை ஆகிய பகுபத உறுப்புகள் புணரும் போது இடையில் தோன்றும் உறுப்பு சந்தி எனப்படும். சந்திப்பகுதிக்கும், இடைநிலைக்கும் இடையில் வருவது பெருவழக்காகும். புரட்சியின் போது ஏற்படும் விகாரங்களான **தோன்றல், திரிதல், கெடுதல்** ஆகியவற்றை சந்தி என்றும் கூறுவர். பெரும்பாலும் **த், ப், க்** என்னும் மூன்று எழுத்துக்களுள் ஒன்று சந்தியாக வரும். உடம்படுமெய்கள் சந்தியாக வருவதுண்டு.

**எடுத்துக்காட்டு ;**

- த், ப், க் - சந்தி
- ய், வ் - உடம்படு மெய்சந்தி

**சாரியை**

- பகுதியோடு இடைநிலையும் இடைநிலையோடு விகுதியும் பொருத்தமாக சார்ந்து இயந்து வரும் உறுப்பு சாரியை ஆகும்.



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

# பகுப்பத உறுப்பிலக்கணம்

- சந்தி வர வேண்டிய இடத்தில் உயிர் மெய் எழுத்து வந்தால் அதனை சாரியை எனக் குறிப்பிட வேண்டும்.
- **எடுத்துக்காட்டு**
  தருகுவென் - தா (தரு)+கு+வ்+என். இதில் பகுதிக்கும், இடைநிலைக்கும் இடையில் வரும் **கு** சாரியை ஆகும்.
- சாரியைக்கு பொருள் இல்லை.
- **அன்** என்பது விகுதியாக வரும்போது **அன்** என்பதே சாரியையாக வரும்.

**எடுத்துக்காட்டு**

**பார்த்தான் - பார்+த்+த்+அன்+அன்.** இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும் அன் சாரியை ஆகும்.

- ஆன், ஆள், ஆர் ஆகிய விகுதிகள் வரும் போது அன் சாரியையாக வராது.

**எடுத்துக்காட்டு**

| | |
|---|---|
| அன்,ஆன்,இன்,இல்,அற்று,இற்று,அத்து,அம்,தம்,நம்,நும், ஏ,அ,உ,ஐ,கு,ன் | சாரியைகள் |

**விகாரம்**

பகுதி, விகுதி இடைநிலை ஆகியன புணரும் போது அவற்றின் வடிவத்தில் ஏற்படும் மாற்றம் விகாரம் எனப்படும். இஃது ஓர் எழுத்து மற்றோர் எழுத்தாகத் திரிந்தும், கெட்டும் நெடில் குறிலாகவும் மாற்றம் பெறும். இத்தகைய மாற்றமே விகாரம் எனப்படும்.

**எ.கா; நின்றான் –** நில் (ன்) + ற் + ஆன். நில் என்னும் பகுதியில் ல்,ன் ஆகத் திரிந்தது விகாரம்.

**எழுத்துப்பேறு**

பகுப்பத உறுப்புகளுள் அடங்காமல் ஏழாவது உறுப்பாக அமைந்து பகுதி, விகுதிக்கு நடுவில் காலத்தை உணர்த்தாமல் வரும் மெய்யெழுத்து எழுத்துப்பேறு ஆகும். பெரும்பாலும் **த்** மட்டுமே வரும். சாரியை இடத்தில் **த்** வந்தால் அது எழுத்துப்பேறு. இது புறத்துறுப்பு எனப்படும்.

**எ.கா;** வந்தனன் – வா (வ) + த் (ந்) +அன் + அன்

- வா – பகுதி **வ** ஆனது விகாரம்.
- த் – சந்தி **ந்** ஆனது விகாரம்.
- த் – இறந்தகால இடைநிலை.
- அன் – சாரியை.
- அன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

**செய்யாதே –** செய் + ய் +ஆ + த் + ஏ

- செய் – பகுதி
- ய் – சந்தி
- ஆ – எதிர்மறை இடைநிலை
- த் – எழுத்தப்பேறு
- ஏ – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

**தமிழ் எண்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 0 – பூஜ்ஜியம் | க – ஒன்று | உ – இரண்டு | ங – மூன்று | ச – நான்கு |
| ரு – ஐந்து | சா –ஆறு | எ– ஏழு | அ – எட்டு | கூ –ஒன்பது |
| ய – பத்து | ய – 1 /16 | ளு – 1 /8 | வ – 1 /4 | இ – 1 /2 |
| ஞ – 3/4 | எா – 100 | சூ – 1000 | | |


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in